சுருக்கம்

ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் – வருவாய்த்துறை – முன்னாள் கிராம அலுவலர்களுக்கு வழங்கப்படும் சிறப்பு ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் மற்றும் முன்னாள் கிராம உதவியாளர்களுக்கு வழங்கப்படும் ஓய்வுதியம், சிறப்பு ஓய்வூதியம் மற்றும் சிறப்பு குடும்ப ஓய்வூதியம் ஆகியவற்றை உயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் [பணி–8(1)] துறை

அரசு ஆணை (நிலை) எண்.168

நாள்: 07.04.2010

படிக்கவும்:

1. அரசாணை (நிலை) எண்.828, வருவாய்த்துறை, நாள் 23.08.1996
2. அரசாணை (நிலை) எண்.629, வருவாய்த்துறை, நாள் 22.07.1998
3. அரசாணை (3டி) எண்.9, வருவாய்த்துறை, நாள் 28.02.2006.
4. அரசாணை (நிலை) எண்.40, வருவாய்த்துறை, நாள் 24.01.2008.
5. அரசாணை (நிலை) எண்.581, வருவாய்த்துறை, நாள் 06.10.2008.
6. அரசாணை (நிலை) எண்.235, நிதி (ஊ.கு) துறை, நாள் 01.06.2009.
7. காஞ்சிபுரம் மாவட்டம் ஓய்வு பெற்ற கிராம அலுவலர்கள் சங்க உறுப்பினர்களின் மனு நாள் 04.08.2009.
8. தமிழ்நாடு அரசு கிராம உதவியாளர்கள் மாநில சங்க இணை பொது செயலாளரின் மனு நாள் 04.08.2009 மற்றும் 22.09.2009.

-----

ஆணை:–

14.11.1980–இல் வெளியிடப்பட்ட அவசர சட்டத்தால் பதவி இழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு, சிறப்பு ஓய்வூதியமாக ரூ.175/–ம் மற்றும் குடும்ப ஓய்வூதியமாக ரூ.100/–ம் வழங்கி, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. பின்னர், சிறப்பு ஓய்வூதியத்தை ரூ.250/–ஆகவும் மற்றும் குடும்ப ஓய்வூதியத்தை ரூ.150/–ஆகவும் உயர்த்தி மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது.

2. 14.11.1980–ல் வெளியிடப்பட்ட அவசர சட்டத்தின்மூலம் பணியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு மதுரை கிளை உயர்நீதிமன்றத் தீர்ப்பின்

அடிப்படையில் வழங்கி வந்த சிறப்பு ஓய்வூதியமான ரூ.250/-ஐ ரூ.350/-ஆக (அகவிலைப்படியுடன் ரூ.1130/-) உயர்த்தியும், மேலும் முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கி வந்த குடும்ப ஓய்வூதியத் தொகையை ரூ.150/-ஐ ரூ.400/-ஆக உயர்த்தி மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணை வெளியிடப்பட்டது. அதே போன்று கிராம உதவியாளர் பணியிடங்களை வரையறுக்கப்படாத விகிதங்கள் கீழ் (Non - Standarised Scale) கொண்டு வந்து 1.6.1995 முதல் முழுநேரப் பணியாளராக மாற்றப்பட்டதின்பேரில் 10 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் பணிமுடித்த ஓய்வு பெற்ற கிராம உதவியாளர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.900/-ஆகவும் மற்றும் 10 ஆண்டுகளுக்கு குறைவாகவும் 5 ஆண்டுகளுக்கு மேலாகவும் பணிபுரிந்து ஓய்வு பெற்ற கிராம உதவியாளர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் ரூ.200/-ஐ அகவிலைப்படியுடன் ரூ.491/-ஆக உயர்த்தியும், மற்றும் 10 ஆண்டுகளுக்கு குறைவாக பணிபுரிந்து இறக்கும் கிராம உதவியாளர் குடும்பங்களுக்கு சிறப்பு குடும்ப ஓய்வூதியம் ரூ.150/-லிருந்து ரூ.400/-ஆகவும் உயர்த்தியும் மேலே மூன்றாவது மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளில் ஆணைகள் வெளியிடப்பட்டன.

3. மத்திய அரசின் 6-வது ஊதிய குழு பரிந்துரையின்படி ஊதியம் மற்றும் ஓய்வூதியம் திருத்தி வெளியிடப்பட்ட ஆணைகளின் அடிப்படையில், மாநில அரசால் அமைக்கப்பட்ட அலுவலர் குழுவின் பரிந்துரையின்படி, தமிழ்நாடு அரசு ஓய்வூதியதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் முறையே ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் திருத்தி அமைக்கப்பட்டு, அரசாணை (நிலை) எண்.235 நிதித்துறை, நாள் 1.6.2009-ல் ஆணைகள் வெளியிடப்பட்டதைப் போன்று காஞ்சிபுரம் மாவட்ட ஓய்வு பெற்ற கிராம அலுவலர்கள் சங்கமும் மற்றும் தமிழ்நாடு அரசு கிராம உதவியாளர்கள் மாநில சங்கமும் முன்னாள் கிராம அலுவலர்கள் மற்றும் கிராம உதவியாளர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியத்தினையும் திருத்தி அமைக்க கோரிக்கை விடுத்தன.

4. அக்கோரிக்கையினை அரசு நன்கு ஆய்வு செய்து, முன்னாள் கிராம அலுவலர்கள் மற்றும் முன்னாள் கிராம உதவியாளர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியம் மற்றும் சிறப்பு குடும்ப ஓய்வூதியத்தினை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்ய அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(a) <u>பணியிழந்த முன்னாள் கிராம அலுவலர்கள்:-</u>

(i) 14.11.1980-ல் வெளியிடப்பட்ட அவசர சட்டத்தால் பணியிழந்த வருவாய்த்துறை முன்னாள் கிராம அலுவலர்களுக்கு தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு ஓய்வூதியமான ரூ.350/-ஐ ரூ.1,140/- (Rounded off) என திருத்தி நிர்ணயிக்கப்படுகிறது. இத்திருத்தத்தினை 1.1.2006 முதல் கருத்தியலாகவும், 24.1.2008 முதல் பணப்பயனாகவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது,

(ii) 14.11.1980-ல் வெளியிடப்பட்ட அவசர சட்டத்தால் பணியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களின் குடும்பத்தினருக்கு தற்போது பிறபடிகளின்றி வழங்கப்பட்டு வரும் சிறப்பு குடும்ப ஓய்வூதியத்தினை மாதம் ரூ.400/-லிருந்து ரூ.560/- (பிறபடிகளின்றி) என திருத்தி நிர்ணயிக்கப்படுகிறது. இத்திருத்தத்தினை 1.1.2006 முதல் கருத்தியலாகவும், 24.1.2008 முதல் பணப்பயனாகவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

(b) வரையறுக்கப்படாத ஊதிய விகிதத்தில் உள்ள கிராம உதவியாளர்கள்:

(i) 10 ஆண்டுகள் மற்றும் அதற்கு மேல் பணி முடித்து ஒய்வு பெற்ற அல்லது பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட (discharged) கிராம உதவியாளர்களின் ஓய்வூதியத்தை ரூ.900/–லிருந்து ரூ.2,050/– என திருத்தி நிர்ணயிக்கப்படுகிறது. இத்திருத்தத்தினை 1.1.2006 முதல் கருத்தியலாகவும், 1.1.2007 முதல் பணப்பயனாகவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

(ii) 5 ஆண்டுகளுக்கு மேலாக 10 ஆண்டுகளுக்கு குறைவாக பணியாற்றி ஓய்வு பெற்ற கிராம உதவியாளர்களுக்கு வழங்கப்படும் மொத்த மாத சிறப்பு ஓய்வூதியம் ரூ.200/–ஐ ரூ.460/–ஆக திருத்தி நிர்ணயிக்கப்படுகிறது. இத்திருத்தத்தினை 01.01.2006 முதல் கருத்தியலாகவும் 24.1.08 முதல் பணப்பயனாகவும் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

(iii) 10 ஆண்டுகளுக்கு குறைவாக பணிபுரிந்து இறக்கும் கிராம உதவியாளர் குடும்பங்களுக்கு பிறபடிகளின்றி வழங்கப்படும் சிறப்பு குடும்ப ஓய்வூதியமான ரூ.400/–ஐ பிறபடிகளின்றி ரூ.560/– என திருத்தி நிர்ணயிக்கப்படுகிறது. இத்திருத்தத்தினை 01.01.06 முதல் கருத்தியலாகவும் 24.1.08 முதல் பணப்பயனுடன் நிர்ணயம் செய்யப்படுகிறது

(c) மேலே இனம் a (ii) மற்றும் b (iii)–ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களைத் தவிர, மற்ற அனைவருக்கும், அகவிலைப்படியை அரசாணை (நிலை) எண்.235, நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 1.6.09–ல் அளித்துள்ள திருத்திய அகவிலைப்படியை கீழ்க்கண்டவாறு அளிக்க ஆணையிடப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1.7.2006 முதல் .......... | 2 % | |
| 1.1.2007 முதல் ........... | 6 % | |
| 1.7.2007 முதல் .......... | 9 % | |
| 1.1.2008 முதல் ........... | 12 % | |
| 1.7.2008 முதல் .......... | 16 % | |
| 1.1.2009 முதல் ........... | 22% | |
| 1.7.2009 முதல் .......... | 27% | அ.ஆ.எண். 482 நிதித் (ஓய்வூதியம்) துறை, நாள் 5.10.2009 |

(d) அரசாணை (நிலை) எண். 235, நிதித் (ஊதியக் குழு) துறை, நாள் 1.6.09–ல் வழங்கப்பட்டவாறு, ஏற்கனவே மருத்துவப்படி ரூ.50/– பெறும் அனைவருக்கும் மருத்துவப்படியை 1.6.09 முதல் ரூ. 50/–லிருந்து ரூ. 100/– ஆக உயர்த்தி வழங்க ஆணையிடப்படுகிறது.

5. மேலே பத்தி 4–ல் இனம் (b) (i) (ii) (iii)–ல் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் கிராம உதவியாளர்களின் ஓய்வூதியம், சிறப்பு ஓய்வூதியம் மற்றும் கிராம உதவியாளர்

குடும்பங்களுக்கு சிறப்பு குடும்ப ஓய்வூதியம் திருத்தி நிர்ணயிக்கப்பட்டது தொடர்பாக தமிழ்நாடு கிராம உதவியாளர்கள் ஓய்வூதிய விதிகள் 1995–க்கு உரிய திருத்தம் தனியாக வெளியிடப்படும். இது குறித்து தகுந்த முன்மொழிவுகள் அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறையின் இசைவுடன் (அ.சா.கு.எண்.19003 /ஓய்வூதியம்/ 2010, நாள் 06.04.2010) வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கி. தனவேல்
அரசு செயலாளர்

பெறுநர்:
முதன்மைச் செயலாளர் மற்றும் வருவாய் நிருவாக ஆணையர், சென்னை–5.
அனைத்து மாவட்டாட்சியர்கள்.
இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை, சென்னை–15.
மாநில கணக்காயர், சென்னை–18/35.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5/9/79.
சம்பள கணக்கு அலுவலர், மதுரை.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:
மாண்புமிகு முதலமைச்சர் / துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டுவசதி துறை அமைச்சர் அவர்களின்
முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
காஞ்சிபுரம் மாவட்டம், ஓய்வு பெற்ற கிராம அலுவலர் சங்கம்,
46. வள்ளல் பச்சையப்பன் தெரு, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் – 631 501.
தமிழ்நாடு அனைத்து கிராம உதவியாளர் மாநில சங்கம்,
51, மாரியம்மன் கோயில் தெரு, நாகை மாவட்டம், நாகூர் – 611 002.
இ.கோ/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

7/4

பிரிவு அலுவலர்